தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பதினான்காவது சட்டமன்றப் பேரவை

பதினைந்தாம் கூட்டத் தொடர் (2012–2013)

13 முதல் 25 வரையிலான அறிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2012 – 2013)

(பதினான்காவது பேரவை)

பதின்மூன்றாவது அறிக்கை

24.07.2012–ஆம் நாளன்று தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் 2 NOV 2012)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2012 – 2013)

(பதினான்காவது பேரவை)

பதின்மூன்றாவது அறிக்கை

24.07.2012–ஆம் நாளன்று தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

பக்கங்கள்

1. குழு உறுப்பினர்கள் – iii

2. அறிக்கை – v- vi

இணைப்பு – I – 1–6

இணைப்பு – II – 9–28

இணைப்பு – III – 31–37

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு (2012 – 2013)

(பதினான்காவது பேரவை)

(2012–ஆம் ஆண்டு மே திங்கள் 19–ஆம் நாள் நியமனம் செய்யப்பெற்றது)

தலைவர்

*1. முனைவர் வைகைச்செல்வன்
அரசு தலைமைக் கொறடா

உறுப்பினர்கள்

2. திரு. ஆர். அருள்செல்வன்
3. திரு. கே. உலகநாதன்
4. திரு. பா. கணேசன்
5. திரு. ஆர்.என். கிட்டுசாமி
6. திரு. டி. சுரேஷ்குமார்
7. திரு. கே. பொன்னுசாமி
8. திரு. ஆ. ராமசாமி
9. திரு. டி.ஆர்.பி. ராஜா
10. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி
11. டாக்டர் த. ஹரிதாஸ்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் – செயலாளர்

திருமதி கு. இந்துமதி – துணைச் செயலாளர்

திரு. அ. அய்யன்பெருமாள் – சார்புச் செயலாளர்

*திரு.ப. மோகன்–5.10.2012 வரை, முனைவர் வைகைச்செல்வன்–22.10.2012 முதல்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
மனுக்கள் குழு (2012–2013)
(பதினான்காவது பேரவை)
பதின்மூன்றாவது அறிக்கை

முன்னுரை

2012–2013–ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

03.07.2012–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற மனுக்கள் குழுவின் கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்ய 24.07.2012–ஆம் நாளன்று அம்மாவட்டத்தில் குழுக் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. அவ்வாறு பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதிகளுக்குட்பட்டிருந்த 84 மனுக்கள் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவற்றின் மீது அறிக்கைகள் கோரப்பட்டன. அறிக்கைகள் பெறப்பட்ட மனுக்களில் 50 மனுக்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு விரிவான பதிலறிக்கைகள் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2012ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 24ஆம் நாளன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள முத்து அரங்கில் குழு கூடியது.

அக்கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆஷிஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட அரசுத் துறை அலுவலர்கள் குழு முன் பதிலளித்தனர். மனுதாரர்களும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

தெரிவு செய்யப்பட்ட 50 மனுக்களை குழு ஆய்வு செய்தது. அவற்றுள் 6 மனுக்கள் குறித்து குழு தனது பரிந்துரைகளை அளித்தது. 31 மனுக்கள் மீது அளிக்கப்பெற்ற அரசுத் துறைகளின் பதிலுரைகள் படித்துப் பதிவு செய்யப்பெற்றன. மீதமுள்ள 13 மனுக்களுக்கான துறைகளின் பதிலுரைகள் ஏற்கப்பட்டு நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்டன.

குழு பரிந்துரை அளித்த மனுக்களின் விவரங்கள் இணைப்பு–I–இல் அளிக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பெற்ற மனுக்களின் விவரங்கள் இணைப்பு–II–இல் அளிக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு–III–இல் அளிக்கப்பட்டுள்ளன.

31–10–2012–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை – 600 009,
31–10–2012,
ஐப்பசித் திங்கள் 15–ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு – 2043.

முனைவர் வைகைச்செல்வன்,
தலைவர்,
மனுக்கள் குழு.



இணைப்பு – I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்களின் விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
1	4338	திரு. ச. உடையார் செயலர், கிராம மக்கள் நலக்குழு, கருங்குளம் 625 615.	தூத்துக்குடி மாவட்டம், கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், கருங்குளம் வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலக மேற்கூரையை சரி செய்துதரக் கோருதல்.	கருங்குளம் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இவ்வலுவலகம் தற்காலிகமாக திட்ட அலுவலர், மகளிர் திட்டம் கால்நடை மருந்தகம் எதிரில் கருங்குளம் எனும் முகவரியில் 01.04.2011 முதல் செயல்பட்டு வருகிறது. கருங்குளம் ஆணையர் அவர்கள் கட்டிடப்பழுதினை தாங்கள் துறை மூலமாக சரி செய்திட தெரிவிக்கப்பட்டதால், சென்னை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணிகள் துறை, முதன்மை செயலர் / சிறப்பு ஆணையர் அவர்களிடம் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதும் கருங்குளம் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலக மேற்கூரை சரி செய்து தரப்படும். (மாவட்ட திட்ட அலுவலர்(பொ) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் எண். 6ஏ, டுவிபுரம், 9–வது தெரு, தூத்துக்குடி–628 003 அவர்களின் கடித எண். ந.க.எண்.2052/அ3/2009,நாள்.19.3.2012)	கருங்குளம் வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலக மேற்கூரையை இரண்டு மாதத்திற்குள் சரி செய்து கொடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
2	4343	திரு. இளையராஜா, V.P. மாரியப்பன், வள்ளுவர் வாசகர் பேரவை, கிளை நூலகம், விளாத்திகுளம் – 628 907, தூத்துக்குடி மாவட்டம்.	தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம், அரசு மருத்துவமனையை தரம் உயர்த்துதல் மற்றும் உபகரணங்கள் வழங்கக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
விளாத்திகுளம், அரசு மருத்துவமனையில் உள்ள பழைய கட்டடங்கள் இடிக்கப்பட்டு தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.59 இலட்சம் செலவில் அறுவை அரங்கம், வார்டுகள், பிணப்பரிசோதனை அறை மற்றும் இதர புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு உள்ளன. இம்மருத்துவமனையில் ஆபரேசன் தியேட்டர் செயல்பட்டு வருகிறது. குடும்பநல அறுவை சிகிச்சை மற்றும் இதர அறுவை சிகிச்சைகள் நடைபெற்று வருகிறது. பல் மருத்துவ சிகிச்சை பிரிவு இயங்கி வருகிறது. சித்தா மருத்துவ பிரிவு செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் அரசு மருத்துவர் பணியிடம் 4 அனுமதிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனை நிர்வாகம் நோயாளிகளுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இணை இயக்குநர் நலப்பணிகள் (பொ), தூத்துக்குடி அவர்களின் கடித எண். 1341/நி1/12, நாள் 20.4.2012)	விளாத்திகுளம் அரசு மருத்துமனையை தரம் உயர்த்துவது குறித்து அரசுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
3	4350	திரு. ஆ. பரமசிவன், பொதுச் செயலாளர், நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு சங்கம், 223, எஸ்.ஆர்.எஸ். தோட்டம், 3 வது தெரு, ஆறுமுகநேரி 628202.	ஆறுமுகநேரி பேரூராட்சி பகுதிக்கு உட்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் ஏற்றி குடிநீர் விநியோகம் செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
ஆறுமுகநேரி பேரூராட்சியில் 2000–2001–இல் மேல்சபை பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. சங்கரலிங்கம் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நல்லூரிலிருந்து போர் மூலம் குடிநீர் ஏற்றி சுமார் ஓராண்டு காலம் மட்டும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டது. மேற்படி பம்பிங் லைன் காயல்பட்டிணம் புறவழிச்சாலை வழியாக மற்றும் தனியார் நிலங்கள் வழியாக பைப் லைன் பதிக்கப்பட்டது. மேற்படி புறவழிச்சாலை விரிவாக்கத்தின் போது சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தூரம் பைப் லைன் பழுது ஏற்பட்டது. மேலும் தனியார் நிலங்கள் அனைத்தும் குடியிருப்பு பகுதியாக மாறிவிட்டபடியால், மேற்படி பகுதிகளில் இருந்து குடிநீர் குழாய்கள் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டபடியால் மேற்படி போர் மூலம் ஏற்றப்பட்ட குடிநீர் தடைபட்டது. தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் ஏற்றுவதற்கு இரு இடங்களில் புகைவண்டி இருப்பு பாதைகளை கடந்து செல்ல வேண்டியுள்ளதால் தென்னக ரயில்வே மதுரை கோட்ட மேலாளர் மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கும் உரிய அனுமதிகள் பெறும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. துறைகளிடமிருந்து அனுமதி பெற்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீரேற்றி குடிநீர் விநியோகிக்கப்படும். (செயல் அலுவலர், தேர்வுநிலை பேரூராட்சி, ஆறுமுகநேரி)	மேற்படி பணிக்கான அனுமதியை கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை அனுமதி கொடுத்திட வேண்டும் என்றும் செயல் அலுவலர் மற்றும் உதவி இயக்குனர் (பேரூராட்சிகள்) இணைந்து ஒரு மாத காலத்திற்குள் பணியை முடிக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
4	4362	திரு. வே. ஜேம்ஸ் அமிர்தராஜ், செயலாளர், அன்னை தெரசா கிராம பொதுநலச்சங்கம் மற்றும் மக்கள் மையம், வேப்பலோடை தூத்துக்குடி மாவட்டம்.	வேப்பலோடை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதியுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றவும் மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் கட்டவும் கோருதல்.

		துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
		இவ்வலுவலக கடித ந.க.எண்.1736/அ5/2009, நாள் 8.9.2011–ன்படி வேப்பலோடை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதியுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகவும் சுற்றுச்சுவர் கட்டுவதற்கான பிரேரணைகள் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசுக்கு பரிந்துரை செய்ய இயக்குநருக்கு இவ்வலுவலக கடித ந.க.எண். 1736/அ5/2009, நாள் 8.9.2011 மற்றும் 22.03.2012–இல் அனுப்பப்பட்டுள்ளன. அரசு மற்றும் இயக்குநர் அவர்களிடமிருந்து உரிய ஆணை மற்றும் நிதி கிடைக்கப் பெற்ற உடன் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இது வரை நிதி உதவி கிடைக்கப் பெறவில்லை. குணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், கோவில்பட்டி அவர்களின் ந.க. எண். 1226/அ5/2012, நாள் 27.03.2012)	அடுத்த ஆண்டில் வேப்பலோடை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோவில்பட்டி துணை இயக்குநர், (சுகாதாரப் பணிகள்) அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
(1)	(2)		
5	4382	திரு.லெ. சண்முகம், செயலாளர், கூட்டுக் குடிநீர் திட்ட குடிநீர் பயனடைவோர் சங்கம், வெங்கடாசலபுரம், வேப்பலோடை 628903, தூத்துக்குடி மாவட்டம்.	குறுக்குச் சாலை குளத்தூர் செல்லும் நெடுஞ்சாலையில் தார் சாலையின் அடியில் போடப்பட்டுள்ள பி.வி.சி. குடிநீர் குழாய்களை சாலையோரமாக மாற்றம் செய்யக் கோருதல்.

		துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
		மனுதாரர் கோரியுள்ள குடிநீர் திட்டப் பணிக்கு உத்தேசமாக ரூ.5.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து நிதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் ஆவன செய்யப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களின் கடித எண். அ3/2459/2011, நாள்.26.4.12)	குறுக்குச் சாலை குளத்தூர் செல்லும் நெடுஞ்சாலையில் தார் சாலையின் அடியில் போடப்பட்டுள்ள பி.வி.சி. குடிநீர் குழாய்களை சாலையோரமாக மாற்றம் செய்யும் பணியை ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து செய்து முடிக்க ஒட்டப்பிடாரம், வட்டார வளர்ச்சி அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
6	4646	திரு.எஸ். ராகவ ஆதித்தன், 5/40, பரமன்குறிச்சி சாலை, காயாமொழி, தூத்துக்குடி மாவட்டம்.	தடம் எண். 153T மற்றும் 604 ஆகியவற்றை மீண்டும் காயாமொழி வழியாக மதுரைக்கு இயக்கிடவும், தடம் எண். 72 6.00 மணி, 11.20 மணி, 15.50 மணி மற்றும் 19.30 மணி ஆகிய நேரங்களில் திருச்செந்தூரிலிருந்து காயாமொழி வழியாக நாகர்கோவிலுக்கு இயக்கிடவும், தடம் எண். 3–ன் குறிப்பிட்ட சில சுற்றுக்கள் அனைத்தையும் காயாமொழி, தளவாய்புரம், பூச்சிக்காடு வழியாக நாசரேத் வரை இயக்கிடவும் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
தடம் எண்.153 T திசையன்விளை– மதுரை மற்றும் தடம் எண். 604 வள்ளியூர்–மதுரை ஆகிய தடப் பேருந்துகளின் இயக்கம், திருச்செந்தூர் –மதுரை, வழித்தடப் பகுதி சீரமைப்பு செய்யப்பட்டபோது திசையன்விளை–திருச்செந்தூர், வள்ளியூர் – திருச்செந்தூர், திருச்செந்தூர்–மதுரை என மாற்றியமைத்து இயக்கப்பட்டு வருகிறது. இதில் திருச்செந்தூரை தொடர்பு படுத்தி இயக்கப்படும் காயாமொழி வழியாக உள்ள சுற்றுக்கள் முறையாக இயக்கப்பட்டு வருகிறது. எனவே, தடம் எண். 153T, 604 என, பேருந்துகளை மீண்டும் கோரிக்கைப்படி இயக்க வாய்ப்புகள் இல்லை. தடம் எண்.72ஐப் பொறுத்தவரை திருச்செந்தூர்–நாகர்கோவில் தடத்தில் இயக்கப்பட்ட இரு பேருந்துகளில் ஒன்று மிகக் குறைந்த பயணிகள் அடர்வு காரணமாக பல ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப்பட்டதாகும். தற்போது காலை 5.15 மதியம் 13.50 ஆகிய நேரங்களில் தடம் எண்.72 பேருந்து முறையாக இயக்கப்பட்டு வருகிறது. விடுபட்ட நேரங்களில் காயாமொழிக்கு பேருந்து வசதிகள் உள்ளது.	மனுதாரர் கோரியுள்ள காயாமொழி, தளவாய்புரம், பூச்சிக்காடு வழியாக ஒரு நடை இரு நடையாவது இயக்க பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமாறு பொது மேலாளர் த.நா.அ.போ.க (திருநெல்வேலி) வது, வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

தடம் எண்.3 நாசரேத்தில் தற்போது இரவு தங்கி கால 6.00 மணிக்கு புறப்பட்டு உடன்குடி வழியாக வாகைவிளை வந்து அங்கிருந்து திருச்செந்தூருக்கு இயக்கப்படுவதால் கோரிக்கைபடி அதிகாலை நேரத்தில் திருச்செந்தூரிலிருந்து காயாமொழிக்கு இயக்க வாய்ப்புகள் இல்லை. மேலும், காயாமொழி, தளவாய்புரம், பூச்சிக்காடு வழியாக இயக்க கேட்டுள்ள தடம் எண்.3–இல் சில குறிப்பிட்டுள்ள சுற்றுக்களை பொறுத்தவரை காலை 08.15 மணி, பிற்பகல் 12.50 மணி ஆகிய நேரங்களில் காயாமொழி வழியாக முறையாக இயக்கப்பட்டு வருகிறது. மற்ற நேரங்களான 15.35 மணி சுற்றில் காயல்பட்டிணம் வழியாகவும், 18.15 மணி சுற்றில் குலசேகரபட்டிணம் வழியாகவும் இயக்கப்படுவதால் இவ்விரு சுற்றுக்களையும் காயாமொழி வழியாக திருப்பி இயக்க இயலாத நிலை உள்ளது.

(பொது மேலாளர், த.நா.அ.போ.க.(திருநெல்வேலி)வது, வண்ணார்ப்பேட்டை, திருநெல்வேலி அவர்களின் க.எண்.8578/பிஎஸ்8/தஅபோக/திலி/2012–8, நாள் 20.07.2012)

இணைப்பு – II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

தமிழ்நாடு LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
1	4336	திரு. மு. சலீம், 1/50, பள்ளிவாசல் வடக்கு தெரு, கொங்கராயகுறிச்சி அஞ்சல், திருவைகுண்டம் தாலுகா.	தூத்துக்குடி மாவட்டம்–திருவைகுண்டம் தாலுகா, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் – வல்லநாடு – கொங்கராயகுறிச்சி நெடுஞ்சாலையை பராமரிப்பு செய்து தர கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
மனுவில் குறிப்பிட்டிருக்கும் சாலையானது (1) மணக்கரை சாலை கி.மீ.0/0–0/4, (2) கொங்கராயகுறிச்சி சாலை கி.மீ.0/0–2/8 மற்றும் (3) கொங்கராயகுறிச்சி–மணக்கரை சாலை கி.மீ.2/8–8/0 முடிய உள்ள சாலையாகும். மணக்கரை சாலை கி.மீ.0/0–0/4 முடிய தனிப் பழுதுபார்த்தல் பணிக்கான ஒப்பந்தம் கோரப்பட்டு உடன்படிக்கை செயலாக்கப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு வாரத்திற்குள் சாலை செப்பனிடும் பணி தொடங்கப்படும். கொங்கராயகுறிச்சி சாலை கி.மீ. 0/0–2/8 மற்றும் கொங்கராயகுறிச்சி–மணக்கரை சாலை கி.மீ.2/8–8/0–இல் கி.மீ. 0/0–1/0 முடிய தற்காலிக வெள்ள நிவாரணப் பணியில் சாலை செப்பனிடப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைப் பணியை செய்து முடிக்க இந்த வருட பராமரிப்பு நிதியிலிருந்து மிகவும் மோசமான நிலையிலுள்ள சாலை சரி செய்யப்படும். (தூத்துக்குடி கோட்டப் பொறியாளர் (நெ), க(ம)ப, தூத்துக்குடி அவர்களின் கடித எண்.1256, நாள் 13–03–2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
2	4339	திரு. ரா. பொன்ராஜ், பொது மக்கள் சார்பாக, கூட்டுடன்காடு கிராமம், தூத்துக்குடி மாவட்டம்.	கூட்டுடன்காடு ஊராட்சி, ஆறுமுகம் நகர் பகுதியில் பாதை வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
கூட்டுடன்காடு ஊராட்சி ஆறுமுகம் நகர் பகுதியில் இணைப்பு பாதை இல்லாமல் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இணைப்புப் பாதைக்கான இடத்தை வட்டாட்சியரிடம் ஒதுக்கி பெற்று நடைபாதை அமைத்துத் தரப்படும் (ஆணையாளர், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித எண். அ5/1058/2012, நாள் 19.7.2012) குழு முன் அளித்த பதிலுரை ஏற்கெனவே உள்ள மண் பாதையில் ஒரு மாதத்தில் தார் சாலை அமைத்துக் கொடுக்கப்படும்.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
3	4340	திரு. ச. உடையார், செயலர், கிராம மக்கள் நலக்குழு, கருங்குளம்.	கருங்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
கருங்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகும். இங்கு 3 பெண் மருத்துவ அலுவலர் 2 ஆண் மருத்துவ அலுவலர் உள்ளனர். இங்கு 24 மணி நேரமும் 4 செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டு காலை மதியம் இரவு நேரங்களில் சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண். 64 நாள். 12.05.07 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

(நிலை) எண். 64 நாள். 12.05.07 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மா.அ.தி.உ) துறை அரசாணையின்படி சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து மட்டுமே கட்டப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் ந.க.எண். 28/PHC/12, நாள் 24.3.12 மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம் கருங்குளம்/சட்டமன்ற உறுப்பினர் தொடர்பு கொண்டு கற்றுச்சுவர் கட்ட நிதி உதவி கோரியுள்ளார் என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
(துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், தூத்துக்குடி அவர்களின் கடித எண். ந.க.எண். 2248/அ6/11, நாள் 29.3.12)

குழு முன் அளித்த பதிலுரை

சட்டமன்ற உறுப்பினரிடம் மேம்பாட்டு நிதி ஒதுக்கப் பெற்று கற்றுச் சுவர் கட்டும் பணி முடிக்கப்படும்.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் கருக்கம் (4)
4	4342	திரு. ச. முனியசாமி, தலைவர் வட்டார பயணிகள் நலச் சங்கம், பரிவல்லிக்கோட்டை – 628 717. ஒட்டப்பிடாரம் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.	கயத்தார்–பசுவந்தனை (வழி) பன்னீர்குளம் அயிரவன்பட்டி, பரிவல்லிக்கோட்டை, ஒட்டநத்தம், சரவணாபுரம், சில்லாங்குளம், பரமன்பச்சேரி, மேல மங்கலம், கப்பிகுளம் தடத்தில் புதிய நகரப் பேருந்து இயக்க.

துறையின் பதிலுரை
(5)

மனுவில் கயத்தார்–கடம்பூர் – பசுவந்தனை பிரதான தடத்தில் இருந்து பிரிந்து உட்புறமாக அமைந்துள்ள பன்னீர்குளம், அயிரவன்பட்டி, பரிவல்லிக்கோட்டை, ஒட்டநத்தம், சரவணாபுரம், சில்லாங்குளம், மேலமங்கலம், கப்பிகுளம் ஆகிய கிராமங்களை இணைத்து புதிய வழித்தடம் இயக்கக் கேட்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, கோரிக்கை தடத்திலுள்ள கிராமங்கள் பேருந்து வசதி பெற்றவை என்பது மட்டுமின்றி, கேட்டுள்ள வழித்தடம் மிகவும் சுற்று வழித்தடமாகும். மேலும், ஒட்டநத்தத்திற்கும் பரிவல்லிக்கோட்டைக்கும் இடையே ஆளில்லாத ரயில்வே கேட் (unmanned level crossing) ஒன்று உள்ளது. பயணிகளின் பாதுகாப்பு நலன் கருதி, ஆளில்லாத ரயில்வே கேட் வழியாக புதிதாக பேருந்துகளை இயக்க ரயில்வே நிர்வாகம் அனுமதி வழங்குவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

எனவே இக்கோரிக்கையினை நிறைவேற்ற இயலாத நிலையினை தெரிவித்துக்கொள்கிறோம்.
(பொது மேலாளர், த.நா.அ.போ.க.(திருநெல்வேலி)வது, திருநெல்வேலி அவர்களின் கடித எண். க.எண்.8578/பிஎஸ்8/தஅபோக/திலி/2012–2, நாள் 29.03.2012)

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
5	4344	திரு. இளையராஜா, V.P. மாரியப்பன், வள்ளுவர் வாசகர் பேரவை, கிளை நூலகம், விளாத்திகுளம் – 628 907.	விளாத்திகுளத்தில் மிளகாய் மல்லி இருப்பு வைப்பதற்கான குளிர்சாதன கிட்டங்கி அமைத்துத்தரக் கோருதல்.

துறையின் இறுதி பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
விளாத்திகுளம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் பொறியியல் பிரிவு மூலம் 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிட்டங்கி கட்டுமான பணி மார்ச் 2012–இல் துவங்கி மேற்கூரை அமைக்கும் பணி மற்றும் சுவர் பூச்சுமான பணியும் முடிந்துவிட்டது. குளிர்பதன கிட்டங்கிக்கான உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் பாம்பே நிறுவனத்திலிருந்து பொறுத்தப்பட வேண்டும். மேலும், மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும். இப்பணிகள் மேற்கொள்ள துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பணிகள் முழுமையாக முடிந்தவுடன், விவசாயிகளின் பயன்பாட்டிற்கு வரும். (வேளாண்மை துணை இயக்குநர், வேளாண்வணிகம், தூத்துக்குடி அவர்களின் கடித எண். இ/616/12, நாள் 16.10.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
6	4354	திரு. எ. முகம்மது, 17வது வார்டு, காட்டுத்தைக்கா தெரு, காயல்பட்டணம்.	17வது வார்டு, காட்டு தைக்கா தெருவிற்குக் குடிதண்ணீர் கிடைக்க ஆவன செய்யக்கோருதல்.

		துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
		காயல்பட்டிணம் நகராட்சி 17வது வார்டு காட்டுத் தைக்கா தெருவில் குடிதண்ணீர் சீராக வினியோகம் செய்யப்படுகிறது. குடிநீர் வினியோகம் செய்யும்போது பொது மக்களிடம் குடிநீர் கிடைப்பது நன்கு அறியப்படுகிறது. மேலும் மின்மோட்டார் பொருத்தி குடிநீர் எடுப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (ஆணையாளர், காயல்பட்டணம் நகராட்சி அவர்களின் கடித எண். 211/2011, நாள் 29.3.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.
வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
7	4355	திரு. ஏ.எம்.எஸ்.கலில் ரஹ்மான், தலைவர், கிராம வளர்ச்சி நற்பணி மன்றம், பேட்மா நகரம், தூத்துக்குடி	திருவைகுண்டம் ஒன்றியம் –ஸ்ரீமூலக்கரை ஊராட்சி பேட்மா நகரத்தில் புதியமேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தரக்கோருதல்.
		துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
		திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீமூலக்கரை ஊராட்சியைச் சேர்ந்த பேட்மா நகரம் கிராமத்தின் மக்கட் தொகை 2006 ஆம் ஆண்டின் வாரிய மறு ஆய்வின்படி 2048. இதில் ஆதிதிராவிடர் 210 ஆகும். தற்போதைய கணக்கீட்டின்படி இக்கிராமத்தின் மக்கட்தொகை 2458, அதில் ஆதிதிராவிடர் 252 ஆகும். இக்கிராமத்திற்கு ஏற்கெனவே அமைந்துள்ள 2 ஆழ்குழாய் கிணறுகள் மூலம் 60,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி வாயிலாக குடிநீர்த் திட்டம் பயனிலிருந்து வருகிறது. வினியோகம் செய்யப்படும் குடிநீரின் அளவும் போதுமானதாக உள்ளது. தற்போதைய மக்கட்தொகையின் அடிப்படையில் ஏற்கெனவே அமையப் பெற்றுள்ள 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே போதுமானது. எனவே வாரிய விதிகளின்படி கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட சாத்தியக் கூறுகள் இல்லை. மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் ஆற்றுக் குடிநீர் வழங்கப்படாத கிராமங்களுக்கென ஒர் கூட்டுக் குடிநீர் திட்டம் திருநெல்வேலி திட்ட உருவாக்கக் கோட்டம் மூலம் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

இத்திட்டத்தில் பேட்மா நகரம் கிராமமும் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு திட்டம் செயலாக்கத்திற்கு வரும்போது பேட்மா நகரத்திற்கு ஆற்றுக் குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

நிர்வாகப் பொறியாளர், த.கு.வ. வாரியம், கிராமக் குடிநீர் திட்டக் கோட்டம், தூத்துக்குடி அவர்களின் கடித எண். 562/கோ.41அ/ உவ/2012/, நாள் 24.4.2012)

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
8	4356	திரு.இ. அமிர்தராஜ், முன்னாள் நகரச் செயலாளர் அ.இ.அ.தி.மு.க, ஆறுமுகநேரி, தூத்துக்குடி.	ஆறுமுகநேரி பேரூராட்சிக்கு என தனி குடிநீர் திட்டம் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
ஆறுமுகநேரி பேரூராட்சியில் தற்போது ஆறுமுகநேரி மற்றும் வீரபாண்டியப்பட்டணம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஊராட்சிகளுக்கு மட்டும் குடிநீர் திட்டம் இருந்து வருகிறது. இப்பேரூராட்சியின் 2001–ஆம் ஆண்டு மக்கள் தொகை 24856 ஆகும். தற்போது மக்கள் தொகை 27311. மேலும் அருகில் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 200000 மக்கள் செல்கிறார்கள். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தற்போது வழங்கப்படும் குடிநீர் 16.09 இலட்சம் லிட்டர் ஆகும். இது தனிநபர் ஒன்றுக்கு 68 LPCD ஆக உள்ளது. பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதால் 90 LPCD வழங்க வேண்டியுள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நாள் ஒன்றுக்கு 24.50 இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்க வேண்டும். ஆனால் தற்போது 16.90 இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, வரும் நிதியாண்டில் கூடுதல் குடிநீர் திட்டத்திற்கு உரிய தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். (செயல் அலுவலர், தேர்வுநிலை பேரூராட்சி, ஆறுமுகநேரி, தூத்துக்குடி மாவட்டம்)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
(1)	(2)				
9	4357	அன்னை தெரசா விடியல் மகளிர் சுய உதவிக்குழு, பிற மகளிர் குழுக்கள் மற்றும் பொதுமக்கள் 2எப்/ 818, 15 வது தெரு, கிழக்கு தபால் தந்தி காலனி (P & T காலனி), தூத்துக்குடி.	வீடுகளுக்கு குடிநீர் வழங்குதல் மற்றும் தெரு மின் விளக்கு வசதி செய்து தரக் கோருதல்.	மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள P & T காலனி 15வது தெரு கிழக்கு பகுதி மீளவிட்டான் பஞ்சாயத்து பகுதியிலிருந்து தற்போது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட இணைப்பு பகுதியாகும். மேற்படி பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாநகராட்சியால் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்காக நான்காவது குடிநீர் குழாய் அமைக்கும் திட்டத்தின் கீழ் பணிமேற்கொள்ள மதிப்பீடு 282.44 கோடிக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் தனது கடித எண். 40808/2008/W83 நாள் 28.06.2012 மூலம் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் குறிப்பிட்ட பகுதியில் மின் விளக்குகள் அமைப்பதற்கு இவ்வலுவலக கடித எண். 8443 நாள் 06.06.2012 மூலம் மின்சார வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மின்சார வாரியத்திடமிருந்து அனுமதி பெற்ற உடன் மின் விளக்குகள் அமைக்கப்படும். தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களின் கடித ந.க. எண். இ5/4142/2012, நாள் 21.3.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
10	4358	திரு. ந. முனியசாமி, தலைவர், வட்டார பயணிகள் நலச்சங்கம், த/அ. பரிவல்லிக்கோட்டை ஒட்டப்பிடாரம் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்	பசுவந்தனை–ஓசனூத்து சாலை மேம்பாடு பணியில் மதிப்பீட்டின்படி பக்கவாட்டில் 1.50 மீட்டர் சரள் விரிக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
பசுவந்தனை–ஓசனூத்து –எஸ்.கைலாசபுரம் சாலையில் தனிப்பழுது பார்த்தல் வேலைகள் ரூ.10,00,000/– மதிப்பீட்டில் 28–02–2011–இல் ஒப்பந்தம் செயலாக்கப்பட்டு தார் பரத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி மதிப்பீட்டில் சாலையின் பள்ளமான மருங்குகளுக்கு சரள் பரத்தல் வேலைகள் செய்ய ரூ.52,046/–க்கு 480 Cum சரள் விரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. தார் வேலைகள் முடிந்தபின் சாலையின் மருங்குகளுக்கு சரள் பரத்தல் வேலைகள் செய்ய அவசியமில்லையென்று கருதி அத்துடன் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. (கோட்டப் பொறியாளர் (நெ), க(ம)ப, தூத்துக்குடி அவர்களின் கடித எண். 1256, நாள்.13.3.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
11	4363	திரு.ஏ.வி.பி.மோகனசுந்தரம், மாநில தலைவர், தமிழ்நாடு நுகர்வோர் பேரவை, 21, பந்தல் மண்டபம், திருச்செந்தூர்.	திருச்செந்தூர் மதுபான கடை எண். 9985–ஐ இடமாற்றம் செய்வது தொடர்பாக.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
மனுதாரரின் கோரிக்கை ஏற்கப்பட்டு கடை இடமாற்றம் செய்வதற்கு மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டதும் உடனடியாக கடை இடமாற்றம் செய்யப்படும். (மாவட்ட மேலாளர் (பொ), டாஸ்மாக் தூத்துக்குடி அவர்களின் கடித ந.க.எண்.அ2/449/2012, நாள் 10.07.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
12	4366	திரு.ப. இராமகிருஷ்ணன், பரிவல்லிக்கோட்டை 628717 ஒட்டப்பிடாரம் தாலுகா, தூத்துக்குடி.	பரிவல்லிக்கோட்டை ஆதிதிராவிடர் குடியிருப்புக் கென்று தனியாக குடிநீர் தொட்டி அமைத்து குடிநீர் விநியோகம் செய்யக் கோரல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
பரிவல்லிக்கோட்டை கிராம ஊராட்சியில் ஆதிதிராவிடர் குடியிருப்பில் 2010–11ஆம் ஆண்டு உள்கட்டமைப்பினை சரிசெய்யும் திட்டத்தில் ரூ.2.83 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி பைப் லைன் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.போதுமான அளவிற்கு தண்ணீர் விடப்படுகிறது. (வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) ஒட்டப்பிடாரம்–628401, தூத்துக்குடி மாவட்டம் அவர்களின் கடித எண். அ3/2459/2011, நாள் 26.4.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
13	4375	திரு. ஐ. முனியசாமி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், வேப்பலோடை ஊராட்சி மன்றம், தூத்துக்குடி மாவட்டம்.	பொதுப்பணித் துறை ஆளுகையிலுள்ள வரத்துக்கால்வாயின் இருபுறமும் பாதுகாப்பாக கரைகள் அமைத்து சேனலின் இரு புறமும் உள்ள விவசாய புஞ்சை நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு குளத்திற்கு தண்ணீர் செல்ல ஆவன செய்ய வேண்டுதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
வேப்பலோடை வரத்துக்கால்வாய்கள் இரண்டும் வரும் நிதி ஆண்டில் அரசு பராமரிப்பு கணக்கில் தூர்வாரி கரைகள் உயர்த்தி பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். (செயற்பொறியாளர், நீ.ஆ.அ. /பொ.ப.து. கோரம்பள்ளம் ஆறு வடிநில கோட்டம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களின் கடித எண். வ.3/கோ.16/57பி/2012/நாள்.19.3.2012)	வேப்பலோடை வரத்துக் கால்வாய்கள் இரண்டும் வரும் நிதியாண்டில் தூர்வாரி கரைகள் உயர்த்த சிறப்பு நிதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும், நிதி கிடைக்கப் பெற்றவுடன் இப்பணி செய்து முடிக்கப்படும் என செயற்பொறியாளர், நீ.ஆ.அ./பொ.ப.து., கோரம்பள்ளம் ஆறு வடிநில கோட்டம், தூத்துக்குடி அவர்கள் தெரிவித்துள்ளதை தொடர்ந்து துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
14	4379	திரு. த. ஐயம்பெருமாள், துணை பெருந்தலைவர், கருங்குளம் ஒன்றியம், திருவைகுண்டம் தாலுகா.	கருங்குளம் ஒன்றியம் செக்காரக்குடி அருகில் உள்ள தரை மட்ட பாலத்தை உயர்மட்ட பாலமாக அமைத்து தடுப்பணை கட்டக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
கருங்குளம் ஒன்றியம் செக்காரக்குடி அருகில் உள்ள தரை பாலமானது சுமார் 139.00மீ நீளமுள்ளது. இதனை வரும் நிதியாண்டில் நபார்டு மற்றும் கிராம சாலைகள் அலகு மூலம் பகுதி- II திட்டத்தில் உயர்மட்ட பாலமாக கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்படும். தடுப்பணை கட்டி நீரை தேக்கி வைப்பது பொதுப்பணித்துறையைச் சார்ந்த பணியாகும். (கோட்டப் பொறியாளர்(நெ), க(ம)ப, தூத்துக்குடி அவர்களின் கடித எண். 1256, நாள்.13.3.2012)	கருங்குளம் ஒன்றியம் செக்காரக்குடி அருகில் உள்ள தரை பாலத்தை உயர்மட்ட மேம்பாலமாக கட்ட மதிப்பீடு தயாரித்து நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளதை ஏற்று துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
15	4380	திரு. சிவ. மி. மகாராஜன், தலைவர், சேதுக்குவாய்த்தான் நீர் பாசன சங்கம், சேதுக்குவாய்த்தான்.	தாமிரபரணி கோட்டம் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு தென்கால் சேதுக்குவாய்த்தான் குளப்பாசன நிலங்களை 'A' குரூப்பில் சேர்க்க வேண்டுதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
சேதுக்குவாய்த்தான் பாசன நிலங்களை 'A' குரூப்பில் சேர்க்க அரசு மட்டத்தில் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. (செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொ.ப.து., தாமிரபரணி வடிநிலக் கோட்டம், திருநெல்வேலி அவர்களின் கடித எண். ந.க.ஜி.2/48800/11, நாள் 10.7.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
16	4387	திரு. இ. அமிர்தராஜ், முன்னாள் நகர செயலாளர், நகர அவைத் தலைவர், அ.இ.அ.தி.மு.க., ஆறுமுகநேரி, தூத்துக்குடி மாவட்டம்.	ஆறுமுகநேரி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
ஆறுமுகநேரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவ அலுவலர் பணியில் உள்ளனர். இங்கு 24 மணி நேரமும் 3 செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டு காலை, மதியம், இரவு நேரங்களில் சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் சித்தா பிரிவு தொழிற்கூடம் வசதி கர்ப்பிணி பெண்கள் பரிசோதனை தாய் சேய் நலப்பணிகள் தடுப்பூசி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் உயர் சிகிச்சைகளை மேற்கொள்ள 4 கி.மீ. தூரத்தில் காயல்பட்டிணம் இரசு மருத்துவமனையும், 10.0கி.மீ.தூரத்தில் திருச்செந்தூர் அரசு மருத்துவமனையையும் அணுகிடலாம். மேலும் ந.க.எண்.13361 /அ4/07, நாள் 21.1.08, 3.2.09, 21.3.12 இயக்குநர் சென்னை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை அவர்களுக்கு இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவது தொடர்பான கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. (துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், தூத்துக்குடி அவர்களின் கடித எண். ந.க.எண். 2248/அ6/11, நாள் 16.7.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
17	4388	திரு. மா. பரமசிவன், த/பெ. (லேட்) மாடசாமி, 13/134, வடக்குத் தெரு, முடிவைத்தானேந்தல் – 628 102	முடிவைத்தானேந்தல் ஊராட்சி வடக்குத் தெரு பகுதியில் வடிகால் வசதி செய்து தரக் கேட்டல்.

		துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
		1. முடிவைத்தானேந்தல் ஊராட்சி வடக்குத் தெரு பகுதியில் வடிகால் வசதி செய்ய ஊராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் எண். 12, நாள். 30.4.2012–இன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. விரைவில் பணி மேற்கொள்ளப்படும் என ஊராட்சி மன்ற தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.
		2. முடிவைத்தானேந்தல் ஊராட்சியில் அனுமதியின்றி வைக்கப்பட்ட 150 குடிநீர் குழாய்கள் இணைப்புகள் அகற்றப்பட்டது.	
		3. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண். 44/ப.எண். 263/2011, நாள் 27.6.2011–இன்படி ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி முடிவைத்தானேந்தல் ஊராட்சி மன்றத் தலைவரால் மொத்தம் 18 பேருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டதை தொடர்ந்து அதில் 12 பேர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். 4006/2012 முதல் 4015/2012–இன்படி வழக்கு தொடர்ந்துள்ளதால் முடிவைத்தானேந்தல் ஊராட்சியில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. (ஆணையாளர், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித எண். அ5/1058/2012, நாள் 19.7.2012)	

20

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
18	4390	திரு.எம். சொக்கலிங்கம், மாநில பொது செயலாளர், மத சார்பற்ற ஜனதா தளம், தூத்துக்குடி	தூத்துக்குடி மாநகர் நீதிமன்றம் வளாகம் முன்பாக பாளையங்கோட்டை நெடுஞ்சாலையில் போக்குவரத்து ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கக் கோருதல்.
		துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
		வரும் காலத்தில் தூத்துக்குடி மாநகர் நீதிமன்ற வளாகத்தின் முன்பு தகுந்த இட வசதி கிடைக்கப் பெற்று போக்குவரத்தை சீர் செய்யும் பொருட்டு டிராபிக் சிக்னல் அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

போக்குவரத்து காவல் துறையினர் எண்ணிக்கை கூடும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட இடத்தில் போக்குவரத்து காவலர்களை நியமித்து போக்குவரத்தை சீர் செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பேருந்து நிலையத்தில் உள்ள நிழற்குடையை சற்று தென்பக்கமாக நகர்த்திவைத்து தார் சாலையில் இருந்து 10 அடி இருக்குமாறு பயணிகளை ஏற்றி இறக்க வசதி செய்து தருமாறு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பி.எஸ்.என்.எல் அலுவலகம் முன்பாக எதிரே பல தரப்பினரும் ஆர்ப்பாட்டங்கள் பொதுக்கூட்டங்கள் நடத்த அனுமதிக்கப்பட்ட இடமாக உள்ளதாலும், போதிய இடவசதி இல்லாததாலும் வாகனம் நிறுத்த இயலாத நிலை உள்ளது.

நீதிமன்ற கட்டிடங்களுக்கு முன்பாக வாகன விபத்துக்கள் ஏற்படாவண்ணம் வேகத்தடை அமைத்து அதில் மஞ்சள் மற்றும் வெள்ளை நிற கோடுகள் அமைத்துத் தர நெடுஞ்சாலைத்துறை உதவி செயற் பொறியாளருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (காவல் கண்காணிப்பாளர், தூத்துக்குடி மாவட்டம் அவர்களின் கடித எண். ப்பி3/11435/664/12, நாள் 31.3.12)

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
19	4391	திரு.எம். சொக்கலிங்கம், மாநில பொது செயலாளர், மத சார்பற்ற ஜனதா தளம், தூத்துக்குடி.	தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட திருச்செந்தூர் சாலையில் காமராஜர் கல்லூரி முன்பு வாகன விபத்துகள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கக் கோருதல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
வரும் காலத்தில் தூத்துக்குடி மாநகர் காமராஜர் சாலை, திருச்செந்தூர் சாலை சந்திக்கும் இடத்தில் போதுமான இடவசதி கிடைத்தவுடன் போக்குவரத்துத் தீவு ஏற்படுத்தி சிக்னல் லைட்ஸ் அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேற்படி சாலை சந்திப்பில் போக்குவரத்து காவலர்கள் நியமிக்கப்பட்டு போக்குவரத்து விபத்துக்கள் ஏற்படாவண்ணம் போக்குவரத்து சீர் செய்யப்பட்டு வருகிறது. நகரின் இடவசதியை ஏற்படுத்த இந்திய அரசின் உப்பு இலாகாவின் சுவற்றை 20 அடி உட்புறம் தள்ளி வைத்து கட்டுவது சம்பந்தமாக ஏற்கெனவே மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் சாலைகளின் இரு புறமும் வாகன போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள பனைமரம், முட்செடிகளை அகற்ற நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளருக்கு ஏற்கெனவே பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (காவல் கண்காணிப்பாளர், தூத்துக்குடி மாவட்டம் அவர்களின் கடித எண். ப்பி3/11435/664/12, நாள் 31.3.12)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
20	4399	திரு. சிவ. மி. மகாராஜன், தலைவர் சேதுக்குவாய்த்தான், நீர் பாசன சங்கம், சேதுக்குவாய்த்தான்.	பொதுப்பணித் துறை தாமிரபரணி வடிநிலக் கோட்டம், ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு, தென்கால் சேதுக்குவாய்த்தான் குளம், மடைகளை பழுதுபார்த்து புதுப்பித்துக் கட்டித்தரக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
சேதுக்குவாய்த்தான் குளம் மடைகளை பழுது பார்க்க வருங்காலங்களில் கிடைக்கப் பெறும் நிதி ஆதாரங்களில் முன்னுரிமை கொடுத்து செயலாக்கப்படும். (செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு,பொ.ப.து, தாமிரபரணி வடிநிலக் கோட்டம், திருநெல்வேலி அவர்களின் கடித எண். ந.க.ஜி. 2/48800/11, நாள் 10.7.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் கருக்கம் (4)
(1)	(2)		
21	4442	திரு. மீ. மகாராசன், சேதுக்குவாய்த்தான்குளம் நீர்பாசனம், சொக்கப்பழங்கரை, மேலாத்தூர் அஞ்சல்–628 151	சேதுக்குவாய்த்தான்குளம்– தெற்கு ஆத்தூர் சாலையை இருவழிச்சாலையாக விரிவுபடுத்த வேண்டுதல்.

துறையின் பதிலுரை
(5)

மனுதாரர் குறிப்பிட்டிருக்கும் சாலையானது சேதுக்குவாய்த்தான்– தெற்கு ஆத்தூர் சாலையாகும். இச்சாலையின் இரு புறத்திலும் உள்ள முட்செடிகள் அவ்வப்போது சாலைப் பணியாளர்களை கொண்டு அகற்றப்பட்டு வருகின்றது. சாலையின் மருங்குகளை அகலப்படுத்த நடப்பு நிதியாண்டில் தேவையான நிதி பெற்று அகலப்படுத்தித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இச்சாலையில் 3000PCU – க்கு மேல் போக்குவரத்து செறிவு இருந்தால்தான் இருவழிச்சாலையாக மாற்ற இயலும். மேற்படி சாலையில் தேவையான போக்குவரத்து செறிவு ஏற்படும் காலத்தில் இருவழிச்சாலையாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
(கோட்டப் பொறியாளர் (நெ), க(ம)ப, தூத்துக்குடி அவர்களது கடித எண். 1256, நாள் 13.3.2012)

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் கருக்கம் (4)
(1)	(2)		
22	4651	திரு. ஏ.ஏ. அஜ்வாது, 17–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர், காயல்பட்டணம்.	கூடுதலாக தெருவிளக்கு அமைத்துத் தர கோருதல்.

துறையின் பதிலுரை
(5)

காயல்பட்டணம் நகராட்சி 17–வது வார்டு காட்டுத்தைக்கா தெருவிற்கு போதிய தெரு விளக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூடுதலாக தெருவிளக்கு பொருத்த ஏற்பாடு செய்யப்படும்.
(ஆணையாளர், காயல்பட்டணம் நகராட்சி அவர்களது கடித எண். 211/2012, நாள் 19.7.2012)

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
23	4652	திரு. சு. சங்கரசுப்பிரமணியன், த/பெ. சுப்பையா, 2/212–6, விளாபி நகர், கோரம்பள்ளம், தூத்துக்குடி–628 101	கோரம்பள்ளம் ஊராட்சி, கோரம்பள்ளம் குளத்துக்கரையில் அமைந்துள்ள இரண்டு படித்துறைகள் செப்பனிட்டு பழுது பார்த்து தரக் கோருதல்.

துறையின் இறுதி பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
கோரம்பள்ளம் குளத்தில் படித்துறைகளை சீரமைக்க இவ்வலுவலகக் கடிதம் அ5/1058/2012, நாள் 6.8.2012ன் மூலம் கோரம்பள்ளம் ஊராட்சி மன்றத் தலைவருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி படித்துறைகளை சீரமைக்க கோரம்பள்ளம் ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் எண்.164, நாள்.16.8.2012ன் படியும், தீர்மானம் எண். 177, நாள் 4.10,.2012ன் படியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் பேரில் ஒன்றிய பொறியாளரால் ரூ.85000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது என்ற விபரமும், விரைவில் உரிய அனுமதி பெற்று பணி துவங்கப்படும். (ஆணையாளர், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் அவர்களது கடித எண். அ5/1058/2012, நாள் 17.10.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
24	4654	திரு.வெ. கணபதிராமன், தலைவர், (ரூசெட்) மாசார்பட்டி அஞ்சல், நென்மேனி வழி, தூத்துக்குடி மாவட்டம்.	புதிய புறக்காவல் நிலையம் அமைக்கக் கோருதல்.

துறையின் இறுதி பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
மேலகரந்தை சந்திப்பு கிராமத்தின் அருகில் மாசார்பட்டி காவல் நிலையம் அமைந்து செயல்பட்டு வருவதால் அப்பகுதியில் புறக்காவல் நிலையம் அமைத்திட தேவையில்லை. (காவல் கண்காணிப்பாளர், தூத்துக்குடி மாவட்டம் அவர்களது கடித எண். ப்பி3/31395/571/12, நாள் 20.7.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
25	4659	திரு.ஜெ. ரவி, 5/49, நடுத்தெரு, கோட்டூர், முத்துலாபுரம் அஞ்சல், எட்டையாபுரம் வட்டம்.	முத்துலாபுரம் பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை
(5)

முத்துலாபுரம் கிராமம், தூத்துக்குடி மதுரை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. நான்குவழிச்சாலை பணி முடிவுற்று போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டுள்ளது. முத்துலாபுரம் பேருந்து நிறுத்தத்தில் பயனிகள் நிழற்குடை கட்ட தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மதுரை அலுவலகத்திற்கு இவ்வலுவலக கடிதம் அ3/2743/2012, நாள் 18.07.2012ன்படி பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
(வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.உ),ஊராட்சி ஒன்றியம், புதூர் தூத்துக்குடி மாவட்டம் அவர்களது கடித எண்.அ3/2743/2012, நாள் 19.7.2012)

குமுவின் குறிப்புரை
(6)

மனுதாரர் கோரிய இடத்தில் நிழற்குடை அமைக்க மாவட்ட நிர்வாகம் மூலம் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் பேசி, இரண்டு மூன்று மாதங்களில் நிறைவேற்றப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததைத் தொடர்ந்து, துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
26	4663	திருமதி க. நூர்ஜஹான் பீவி, 36ஏ, காட்டு தைக்கா தெரு, காயல்பட்டிணம், தூத்துக்குடி மாவட்டம்.	காயல்பட்டிணத்திலிருந்து தூத்துக்குடி இரயில் நிலையம் வரை மீண்டும் பேருந்து வசதி செய்யக் கோருதல்.

துறையின் இறுதி பதிலுரை
(5)

நகர வழித்தடம் எண்.எம்57–ன் மாலை நேரச்சுற்றை காயல்பட்டிணத்திலிருந்து தூத்துக்குடி புகைவண்டி நிலையம் வழியாக தூத்துக்குடி சார் ஆட்சியர் அலுவலகம் வரை இயக்கிட உத்தரவிடப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.
(பொது மேலாளர், த.நா.அ.போ.க,திருநெல்வேலி)வது, வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களின் கடித எண். 8578/பிஎஸ்8/த.அ.போ.க/திலி/2012–3, நாள் 17.10.2012)

குமுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
27	4671	திரு. டி. சிவசுந்தரலிங்கம், கந்தருசகபுரம் மேலத்தெரு, டி. துரைச்சாமிபுரம் அஞ்சல், தெற்குகல்மேடு ஊராட்சி, ஒட்டப்பிடாரம் தாலுகா, தூத்துக்குடி.628105.	தெற்கு கல்மேடு ஊராட்சி சுந்தரேசபுரம் மயானக்கரையில் இருந்து தெற்கு கல்மேடு நீர்பாசனக் கண்மாய் வரை ஓடையை தூர்வாரி அகலப்படுத்தக் கோருதல்.
		துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
		2011–12ம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ஓடையினை ஆய்வு செய்து திட்ட மதிப்பீடு தயார் செய்து பணி முடிக்கப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), ஒட்டப்பிடாரம், அவர்களின் கடித எண்.அ3/1954/2012, நாள் 18.7.2012)	அவசர நிலை கருதி, மனுதாரர் கோரிய ஓடையை தூர்வாரும் பணியினை வேறு ஏதாவது திட்டத்தில் செய்ய முயற்சி எடுப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததைத் தொடர்ந்து, துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
28	4672	தலைவர், கவியரசர் அண்ணாமலை சமூக சேவா சங்கம், த. சண்முகபுரம், செம்புதூர் போஸ்ட் (வழி) துறையூர், எட்டயபுரம் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.	த. சண்முகபுரம் கிராமத்தை எட்டயபுரத்துடன் தொடர்புபடுத்தி புதிதாக பேருந்து வசதி செய்யக் கோருதல்.
		துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
		தற்போது த. சண்முகபுரம் கிராம பொது மக்கள் பயன்பெறும் வகையில் தடம் எண்.3 எனும் நகரப் பேருந்து மூலம் நாளொன்றுக்கு 12 சுற்றுக்கள் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே, தடம் எண். 3 நகரப் பேருந்து மூலம் இயக்கப்படும் சுற்றுக்களைப் பயன்படுத்தி இக்கிராம மக்கள் கீழ ஈராலுக்கு வந்துவிட்டால், அங்கிருந்து எட்டயபுரம் செல்ல போதிய பேருந்து வசதிகள் உள்ளன. (பொது மேலாளர், த.நா.அ.போ.க. (திருநெல்வேலி)வது, வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களது கடித எண். 8578/பிஎஸ்8/த.அ.போக/திலி/2012–13, நாள் 20.7.2012)	புதிய பேருந்து வசதி செய்து கொடுக்க கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்ததைத் தொடர்ந்து, துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
29	4677	திரு. முருகேசன், த/பெ. பொம்மையா நாயக்கர், கம்பத்துப்பட்டி, சிவலார்பட்டி அஞ்சல், விளாத்திகுளம் வட்டம்	சிவலார்பட்டி ஊராட்சி கம்பத்துப்பட்டி ஊராட்சியில் அமைந்துள்ள மெய்யன் ஊரணியில் தடுப்புச் சுவர் அமைக்கக் கோருதல்.

துறையின் இறுதி பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
கம்பத்துப்பட்டி மெய்யன் ஊரணியில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிக்காக புதூர் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் புது வாழ்வு திட்ட ஊக்க நிதியிலிருந்து ரூ.1.40 லட்சத்திற்கு தடுப்புச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மெய்யன் ஊரணியில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), ஊராட்சி ஒன்றியம், புதூர், தூத்துக்குடி மாவட்டம் அவர்களின் கடித எண். அ3/2743/2012, நாள் 16.10.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது..

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
30	4678	திரு. சின்னதுரை, தங்கையாபுரம், கடையனோடை அஞ்சல், தூத்துக்குடி.	கடையனோடை மற்றும் தங்கையாபுரம் ஆகிய இரு கிராமங்களுக்கும் சேர்த்து கடையனோடை மின்மாற்றி எண்.1லிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாலும் தங்கையாபுரத்தில் குறைந்த மின்னழுத்தம் ஏற்பட்டு பள்ளி மாணவர்கள் படிக்க இயலாது இருப்பதாலும் தங்கையாபுரத்தில் தனியாக புதிய மின்மாற்றி அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
மனுதாரர் கோரியுள்ளபடி, தங்கையாபுரம் வீட்டு மின்னிணைப்பு எண்கள் 743, 612 மற்றும் 654 ஆகியவற்றில் 19.07.2012 அன்று இரவு நேரத்தில் ஆய்வு செய்ததில் மின்னழுத்தம் சராசரியாக 218 வோல்ட் இருப்பது கண்டறியப்பட்டது. இருப்பினும் மனுதாரர் கோரியபடி, தங்கையாபுரத்திற்கு புதியதாக மின்மாற்றி நிறுவ ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புதிய மின்மாற்றி 45 தினங்களுக்குள் நிறுவப்படும். (மேற்பார்வை பொறியாளர், தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம், தூத்துக்குடி அவர்களது கடித எண். 1772, நாள் 16.10.2012)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் கருக்கம் (4)
31	4679	திரு. இரா. சின்னதுரை, தங்கையாபுரம், கடையனோடை அஞ்சல், தூத்துக்குடி–628614	கடையனோடையிலிருந்து திருநெல்வேலிக்கு நேரடிப் பேருந்து வசதி செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை
(5)

கடையனோடை எனும் கிராமமானது, திருநெல்வேலி – திருச்செந்தூர் சாலையிலுள்ள ஆழ்வார்திருநகரியிலிருந்து பிரிந்து நாசரேத் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. திருநெல்வேலியிலிருந்து கடையனோடை வழியாக மணப்பாடு வரை இயக்கப்பட்ட தடம் எண்.173 ஏ மிகக்குறைந்த பயணிகள் பயன்பாடு காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது.

கடையனோடை கிராம பொது மக்கள் தற்போது இயக்கப்படும் பேருந்துகளைப் பயன்படுத்தி ஆழ்வார்திருநகரிக்கு வந்துவிட்டால் அங்கிருந்து திருநெல்வேலிக்குச் செல்ல ஏராளமான பேருந்து வசதிகள் உள்ளன என்பதால், கோரிக்கைப்படி நேரடிப் பேருந்து ஏதும் உடனடியாக இயக்க அவசியம் எழவில்லை.

(பொது மேலாளர், த.நா.அ.போ.க.திருநெல்வேலி)வது, வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களின் கடித எண். 8578/பி.எஸ்8/தஅபோக/2012–13, நாள் 20.7.2012)

குழுவின் குறிப்புரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
1	4337	திரு. மு. சலீம், 1/50, பள்ளிவாசல் வடக்கு தெரு, கொங்கராயகுறிச்சி அஞ்சல், திருவைகுண்டம் தாலுகா.	பொது மகளிர் சுகாதார வளாகம் அமைத்துத்தரக் கோருதல்.	தற்சமயம் வளாகம் புதுப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. (ஆணையாளர், கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித எண். அ2/765/2012, நாள் 12.3.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
2	4341	Lt.Col.எல். சுந்தரம் (ஓய்வு), 13/134, மேற்குத் தெரு, முடிவைத்தானேந்தல் – 628 102,	முடிவைத்தானேந்தல் ஊராட்சி சமுதாய நலக்கூடம் பழுது பார்த்துத் தரக் கோருதல்.	முடிவைத்தானேந்தல் ஊராட்சி சமுதாய நலக்கூடம் தற்போது ஊரக கட்டங்கள் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2010–2011–ஆம் ஆண்டிற்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பழுது பார்க்கும் பணி நிறைவு பெற்று விட்டது. விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் (ஆணையாளர், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித எண். அ5/1058/2012, நாள் 19.7.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
3	4349	திரு. ஏ. பரமசிவன், பொது செயலாளர், நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு சங்கம், 223, எஸ்.ஆர்.எஸ். தோட்டம்– 3 வது தெரு, ஆறுமுகநேரி–628 202.	தூத்துக்குடி மாவட்டம், முடிவைதானேந்தல் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் நிலவும் குறைந்த மின்னழுத்தத்தை சரி செய்யக் கோருதல்.

துறையின் இறுதி பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
முடிவைதானேந்தல் கே. புதூர் பகுதிகளில் நிலவும் குறைந்த மின்னழுத்தத்தை சரி செய்யும் பொருட்டு அப்பகுதியில் கூடுதலாக ஒரு மின்மாற்றி நிறுவ மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு புதிய மின்மாற்றி 27.8.2012 அன்று இயக்கிவைக்கப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. (மேற்பார்வை பொறியாளர், தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம், தூத்துக்குடி அவர்களின் கடித எண். மே.பொ/தூமிபவ/உ.செ.பொ/வ/ உ.பொ/ ஆர்இசி/கோ.கட்டு/அ.எண்.1494/2012, நாள் 7.09.2012	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
4	4353	திரு. ஜி. கனி, (பொது மக்கள் சார்பாக) காட்டுதைக்கா தெரு, காயல்பட்டிணம், திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி	காயல்பட்டிணத்திலிருந்து ஆத்தங்கரைப் பள்ளி வாசலுக்கு இயக்கப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கக் கோருதல்.

துறையின் திருத்திய பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
காயல்பட்டணத்திலிருந்து ஆத்தங்கரைப் பள்ளி வாசலுக்கு ஒரு பேருந்து மூலம் தினசரி 5 நடைகள் இயக்கப்படுகின்றன. (பொது மேலாளர், த.நா.அ.போ.க.(திருநெல்வேலி)வது, திருநெல்வேலி அவர்களது கடித எண். 8578/பிஎஸ்8/த.அபோக/ திலி/2012–5, நாள் 29.3.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
5	4359	திரு. வெ. ஜேம்ஸ் அமிர்தராஜ், செயலாளர், அன்னை தெரசா கிராம பொதுநல சங்கம், வேப்பலோடை,வேப்பலோடை ஊராட்சி, தூத்துக்குடி மாவட்டம்	வேப்பலோடை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு சாலை வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
2011–12ம் ஆண்டு மாநில நிதிக்குழு மான்யத்தில் வேப்பலோடை ஊராட்சிகளில் நடராஜபுரம் மேல்நிலைப்பள்ளி சாலை அமைத்தல் பணிக்கு ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான டெண்டர் 23.7.2012 அன்று விடப்பட்டுள்ளது. (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), ஒட்டப்பிடாரம், அவர்களின் கடித எண். ந.க.பி1/33/2012(2), நாள் 30.5.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
6	4367	திரு. ஐ. முனியசாமி, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், வேப்பலோடை, தூத்துக்குடி மாவட்டம்	வேப்பலோடை ஊராட்சி, வெங்கடாசலபுரம் பக்கத்தில் 10 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஊரணியை ஆழப்படுத்தக் கேட்டல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
தற்போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் 2011–12ம் ஆண்டில் இப்பணி தேர்வு செய்யப்பட்டு ரூ.7.10 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் 16.3.2012 முதல் ஊரணி ஆழப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. (வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களது கடித எண். அ3/2459/2011, நாள் 26.4.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
7	4371	திரு. ஜி.கே. கருப்பசாமி, 35வது வட்டப் பிரதிநிதி, ஸ்டாலின் காலனி, கோவில்பட்டி	கோவில்பட்டி நகராட்சி வார்டு எண். 35 ஸ்டாலின் காலனியில் சுகாதார சீர்கேடுகளை களைவது சம்பந்தமாக.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
கோவில் பட்டி நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு எண்.6க்கு உட்பட்ட பகுதியான வார்டு எண்.35ல் உள்ள ஸ்டாலின் காலனியில் சுகாதாரப் பணிகள் மற்றும் சிறப்பு கூட்டு துப்புரவு பணி நடத்தப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி பகுதியில் அமைந்துள்ள சத்துணவு மையம் அருகில் பன்றிக் கழிவுகள், மாட்டு இறைச்சி கழிவுகள் ஏதும் கொட்டப்படாமல் தொடர் கண்காணிப்பில் பார்வையிடப்பட்டு வரப்படுகிறது. மேலும் சத்துணவு மையம் அருகில் அமைக்கப்பட்டு இருந்த பன்றிக் குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டது. (ஆணையாளர், கோவில்பட்டி நகராட்சி அவர்களின் கடித எண். 2672/2012/எச்2, நாள் 27.3.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
8	4381	திரு. கே.எஸ். மாரிமுத்து, த/பெ. கே.எஸ்.சிவசப்பிரமணியப்பிள்ளை, 324பி, சித்ரா காம்ப்ளெக்ஸ், பாளையங்கோட்டை ரோடு (கிழக்கு) தூத்துக்குடி.	ராஜாஜி பூங்காவில் காய்ந்து போன இரண்டு மரங்களை அகற்றக்கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
ராஜாஜி பூங்காவில் பட்டுப்போன மரங்கள் தற்போது அகற்றப்பட்டுள்ளது. (ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி அவர்களின் கடித ந.க.எண். இ5/4142/2012, நாள் 21.3.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
9	4645	திரு.பெ. ராமச்சந்திரன், 71/6, திருநகர், 2–வது தெரு கோவில்பட்டி–628 501 தூத்துக்குடி மாவட்டம்.	கோவில்பட்டியிலிருந்து புங்கவர்நத்தம் வரை காலை 11.30 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் செல்லும் நகரப் பேருந்துகளை எப்போதும் வென்றான் வரை தட நீட்டிப்பு செய்திட கோருதல்.

துறையின் இறுதி பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
மனுதாரர் கேட்டுள்ளபடி, கோவில்பட்டி கிளை தடம் எண்.6 நகரப்பேருந்தின் 11.45 மணி சுற்றை புங்கவர்நத்தத்திலிருந்து எப்போதும் வென்றான் வரை தட நீட்டிப்பு செய்து தற்போது இயக்கப்பட்டுவருகிறது. தவிரவும், ஏற்கெனவே குழுவிற்கு தெரிவித்துள்ளபடி, தடம் எண்.4 –ன் மாலை நேர சுற்றும் (17.40 மணி) முறையாக எப்போதும் வென்றான் வரை தட நீட்டிப்பு செய்து இயக்கப்பட்டு வருகிறது. (பொது மேலாளர், த.நா.அ.போ.க.(திருநெல்வேலி)வது, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி வர்கள் கடித எண். 8578/பிஎஸ்8/த.அ(போக/திலி/2012–1, நாள் 17.10.12)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
10	4648	திரு.கே.டி. சுப்ரமணியன், த/பெ. திருமால் ரெட்டியார், 1/81, வடக்கு தெரு, கன்னக்கட்டை	கன்னக்கட்டை 1வது மற்றும் 2வது வார்டில் சிமிண்ட் சாலை அமைக்க வேண்டுதல்.

துறை குழு முன் அளித்த திருத்திய பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
ஊராட்சிப் பொதுநிதியிலிருந்து இந்த நிதியாண்டிலேயே பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ள ஊராட்சி பொது நிதியிலிருந்து 2.8.2012 அன்று நடைபெற்ற ஊராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2, 3 வாரத்திற்குள் இந்தப் பணி நிறைவேற்றப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர், கயத்தார் அவர்களின் கடித எண். அ5/510/2011, நாள் 18.7.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
11	4649	திரு.கே.டி. சுப்ரமணியன், த/பெ. திருமால் ரெட்டியார், 1/81, வடக்கு தெரு, கன்னக்கட்டை. எப்போதும் வென்றான் (அஞ்சல்), தூத்துக்குடி மாவட்டம்	கோவில்பட்டியிலிருந்து காமநாயக்கன்பட்டி, கன்னக்கட்டை எப்போதும் வென்றான் வழியாக தூத்துக்குடிக்கு புதிதாக பேருந்து வசதியும், கோவில்பட்டியிலிருந்து புங்கவர்நத்தம் கிராமத்திற்கு மதியம் 1.30 மணி மாலை 6.30 மணி நேரங்களில் இயக்கப்படும் நகரப் பேருந்தை எப்போதும் வென்றான் வரை தட நீட்டிப்பு செய்து இயக்கக் கோருதல்.

துறையின் இறுதி பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
மனுதாரர் கேட்டுள்ளபடி, தடம் எண் 4 கோவில்பட்டியில் 17.40 மணிக்கு புறப்படும் சுற்றை புங்கவர்நத்தத்திலிருந்து எப்போதும் வென்றான் வரை தட நீட்டிப்பு செய்து முறையாக இயக்கப்பட்டு வருகிறது. தடம் எண். 6 கோவில்பட்டியில் 11.45 மணிக்கு புறப்பட்டு புங்கவர்நத்தம் வரை இயக்கப்பட்டு வந்த சுற்றை எப்போதும் வென்றான் வரை தட நீட்டிப்பு செய்து தற்போது இயக்கப்பட்டு வருகிறது. எனவே, கன்னக்கட்டை பகுதி பொதுமக்கள் ஏற்கெனவே இயக்கப்பட்டு வரும் பேருந்துகளுடன் கூடுதலாக இயக்கப்படும் இப்பேருந்துகளைப் பயன்படுத்தியும் எப்போதும்வென்றான் வந்து தூத்துக்குடி செல்ல போதிய பேருந்து வசதிகள் உள்ளன. (பொது மேலாளர், த.நா.அ.போ.க.(திருநெல்வேலி)வது, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி அவர்களின் கடித எண். 8578/பிஎஸ்8/த.அ(போக)/திலி/2012–4, நாள் 17.10.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
12	4655	திரு.வெ. கணபதிராமன், தலைவர், (ருசெட்) மாசார்பட்டி அஞ்சல், நென்மேனி வழி, தூத்துக்குடி மாவட்டம்.	திருச்செந்தூர்–சாத்தூர்(வழி) தூத்துக்குடி எட்டயபுரம், மேலக்கரந்தை, மாசார்பட்டி, நென்மேனி, இருக்கன்குடி புதிய வழித்தடத்தில் பேருந்து வசதி கோருதல்.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் இறுதி பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
13	4658	திரு. பூ. துரை, 2/75–52, தாண்டவன்காடு, உடன்குடி ஒன்றியம், திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.	தாண்டவக்காடு குக்கிராமத்தில் மின்பாதைகள் சரிவர பராமரிக்கப்படாமல் அடிக்கடி மின்தடங்கல்கள் ஏற்படுவதுடன் ஊரில் நுழைந்தவுடன் ரோட்டின் குறுக்காக மின்னிணைப்பு வயர் மிக தாழ்வாக உள்ளதுடன் பிரதான சாலையில் ஒரு மின் கம்பம் பழுதடைந்து கீழே விழும் நிலையில் உள்ளதையும் சரி செய்யக் கோருதல்.	ஒரு புதிய வழித் தடம் மூலம் திருவைகுண்டம்–சாத்தூர் (வழி) தூத்துக்குடி, எட்டையபுரம், மேலக்கரந்தை, மாசார்பட்டி, நென்மேனி மற்றும் இருக்கன்குடி தடத்தில் பேருந்து இயக்கம் துவக்கப்பட்டு, தினசரி 4 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. (பொது மேலாளர், த.நா.அ.போ.க.(திருநெல்வேலி)வது, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி அவர்களது கடித எண். 8578/பிஎஸ்8/த.அ.போ.க./தில்லி/ 2012–2, நாள் 17.10.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.
37				மனுதாரர் மனுவில் கோரியுள்ளபடி தாண்டவன்காடு குக்கிராமத்தில் உள்ள மின்பாதைகள் பராமரிப்பு செய்யப்பட்டது. ஊரின் ஆரம்பத்தில் மிக தாழ்வாக இருந்த சர்வீஸ் வயர் இழுத்து கட்டப்பட்டுவிட்டது. மேலும் பழுதடைந்த மின்கம்பம் 19.07.2012 ல் மாற்றியமைக்கப்பட்டது. (மேற்பார்வை பொறியாளர், தூத்துக்குடி மினபகிர்மான வட்டம், தூத்துக்குடி அவர்களின் கடித எண். 1210, நாள் 19.7.2012)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

அ.மு.பி. ஜமாலுதீன்,
செயலாளர்.



அரசு மைய அச்சகம், சென்னை — 600 079.